Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 466/2025 PW-1**

Name : கஸ்தூரி
Father / Husband name : தண்டபாணி
Village : பூதேரி
Age : 40
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.03.2026

Accused present. Defence counsel present. HC 1465 present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது சித்தாள் வேலை செய்துவந்தேன், தற்போது வேலை செய்யவில்லை. சாட்சி அரங்கநாதன் எனது மருமகன். சாட்சிகள் பூபாலன், பிரபு ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 27.03.2025 அன்று காலை 08.00 மணியளவில் நான் வீட்டிலிருந்து வழக்கம்போல் வேலைக்கு செல்வதற்காக எனது மருமகன் அரங்கநாதனின் இருச்சக்கர வாகனத்தில் வீட்டிலிருந்து திண்டிவனத்திலுள்ள செஞ்சி பேருந்து நிறுத்ததிற்கு சென்றேன். எனது மருமகன் என்னை இறக்கிவிட்டு சென்றுவிட்டார். நான் செஞ்சி பேருந்து நிறுத்தத்தில் ரோட்டை கடப்பதற்காக சாலையில் ஓரமாக நின்றிருந்தபோது திண்டிவனத்திலிருந்து செஞ்சி மார்க்கமாக இருச்சக்கர வாகனம் வந்து என்மீது மோதியது. அதில் எனக்கு வலது கால் அடிப்பட்டது. பின்னர் அங்கிருந்தவர்கள் எனது அரங்கநாதனும் என்னை தூக்கி ஆட்டோவில் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அன்றையதினம் விபத்து ஏற்படுத்திய நபரை நான் சரியாக பார்க்கவில்லை, என்னால் அடையாளம் காட்ட முடியாது. அடிப்பட்ட என்னை திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார்கள். எனது வலது காலில் அறுவை சிகிச்சை செய்தார்கள். நான் மருத்துவமனையிலிருந்தபோது போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள

கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். எனக்கு விபத்து நடந்ததிலிருந்து நான் வேலை செய்யவில்லை. ( சாட்சி கோல் ஊன்றி நடந்துவந்தார், நிற்க இயலாததால் அமர்ந்து சாட்சியம் அளித்தார் )

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது மருமகன் என்னை இறக்கிவிட்டு மார்க்கெட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். அவர் மார்க்கெட்டிற்கு சென்ற பிறகு தான் எனக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, மார்க்கெட்டிற்கு சென்றுவிட்டு எனது மருமகன் திரும்பிவரும்போது விபத்து ஏற்பட்டது. எனது மருமகன் மார்க்கெட்டிற்கு பதார்த்தம் போட சென்றாரா என்றால் இல்லை, செஞ்சி பேருந்து நிறுத்ததிற்கு அருகிலுள்ள உழவர் சந்தைக்கு சென்றார். மேற்படி உழவர் சந்தை விபத்து நடந்தயிடத்திலிருந்து சற்று தொலைவில் சுமார் 300, 400 மீ தொலைவில் உள்ளது என்றால் சற்று தொலைவில் உள்ளது, நடந்து சென்றால் 5 நிமிடத்தில் செல்லலாம். விபத்து நடந்தயிடமானது காலை நேரம் என்பதால் கூட்டம் நெரிசலாக இருக்கும் என்றால் கூட்டம் அதிகமாக இருக்காது, சம்பவயிடத்திற்கு அருகிலுள்ள அம்மா உணவகத்தில் கூட்டமாக இருக்கும். பொதுவாக செஞ்சி பேருந்து நிறுத்தத்தை கடக்கவேண்டுமென்றால் அந்த வழியாக செல்லும் வாகனங்கள் மெதுவாக தான் செல்லவேண்டும் என்றால் இல்லை. செஞ்சி பேருந்து நிறுத்ததில் கூட்டமாக இருக்குமா என்றால் இல்லை, இருச்சக்கர வாகனம் வேகமாக வந்தது. விபத்தில் எனக்கு வெளிப்புறக்காயம் ஏற்பட்டதா என்றால் விபத்து நடந்தவுடன் நான் மயக்கமாகிவிட்டேன். புகார் வாக்குமூலத்தில் எனது மருமகன் சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் நினைவில்லை. எனது சிறிய மருமகன் சாலைவிபத்தில் இறந்துவிட்டதால் நான் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளேன் என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. அதனால் நான் சில நேரங்களில் என்னை மறந்துவிடுவேன் என்றால் சரியல்ல.

சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை, இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி** - இன்று ஆஜரிலிருக்கும் எதிரியை நான் இதற்கு முன்பு பார்த்துள்ளேனா என்றால் இல்லை, பார்த்ததாக நினைவில்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 466/2025 PW-2**

Name : அரங்கநாதன்
Father / Husband name : அய்யனாரப்பன்
Village : சிங்கனூர்
Age : 33
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.03.2026

Accused present. Defence counsel present. HC 1465 present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 எனது மாமியார். சாட்சி பூபாலன் ஆட்டோ ஓட்டுபவர் அவரை தெரியும், சாட்சி பிரபு என்பவரை எனக்கு தெரியும். கடந்த 27.03.2025 அன்று காலை சுமார் 08.00 மணியளவில் அ.சா.1 ஐ பூதேரியிலுள்ள அவரின் வீட்டிலிருந்து திண்டிவனம் செஞ்சி ரோட்டிலுள்ள அம்மா உணவகத்திற்கு எதிரில் இருச்சக்கர வாகனத்தில் அழைத்துவந்து இறக்கிவிட்டேன். நான் உழவர் சந்தைக்கு சென்று கத்திரிக்காய் போட்டுவிட்டு திரும்பவரும்போது அம்மா உணவகத்திற்கு எதிரில் கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தபோது எனது மாமியாருக்கு காலில் அடிப்பட்டு இருந்தது. போலிசார் ஆஜர் எதிரி மற்றும் அவரின் வாகனமான PY 01 5989 Bajaj இருச்சக்கர வாகனத்தையும் பிடித்து வைத்திருந்தார். நான் விசாரித்தபோது அங்கிருந்தவர்கள் எதிரி போன் பேசிக்கொண்டு வேகமாக வந்து எனது மாமியார் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள். பின்னர் அந்தயிடத்திலிருந்த பூபாலன் என்பவரின் ஆட்டோவில் எனது மாமியாரை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்காக அழைத்துச்சென்றேன். அன்றையதினமே காலை 10 மணிக்கு வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரியின் பெயரை ஞானமூர்த்தி என்று எதிரியின் மாமனார் என்னிடம் மருத்துவமனையில் சொன்னார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். எதிரியை போலிசார் சொல்லி தான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான், போலிசார் எதிரியை பிடித்து வைத்திருந்தார். போலிசார் விசாரணையில் எதிரியின் பெயரை ஞானமூர்த்தி என்று எதிரியின் மாமனார் என்னிடம் மருத்துவமனையில் சொன்னதாக சொன்னேனா என்றால் இல்லை, போலிசார் விசாரித்து சென்றபிறகு எதிரியின் மாமனார் வந்தார். அடிப்பட்டவர் எனது மாமியார் என்பதற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 466/2025 PW-3**

Name : பூபாலன்
Father / Husband name : சேட்டு
Village : நெடிமொழியனூர்
Age : 27

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.03.2026

Accused present. Defence counsel present. HC 1465 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆட்டோ ஓட்டும் வேலை செய்கிறேன். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சி பிரபு என்பவரை எனக்கு தெரியாது. 27.03.2025 அன்று காலை சுமார் 8 மணியளவில் திண்டிவனம் வசந்தகோவிலிருந்து திண்டிவனம் செஞ்சி பேருந்து நிறுத்தத்திற்கு சவாரி சென்று இறக்கிவிட்டு செஞ்சி பேருந்து நிறுத்தம் அருகே இருந்தபோது பேருந்து நிறுத்தம் அருகுக அ.சா.1 கஸ்தூரி ரோட்டின் ஓரமாக நின்றிருந்தார். அப்போது திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருந்து செஞ்சி மார்க்கமாக PY 01 BL 5989 இருச்சக்கர வாகனம் வந்து அ.சா.1 ன் மீது மோதியது. அதில் அ.சா.1க்கு காலில் அடிப்பட்டது. பின்னர் அங்கிருந்தவர்கள் அ.சா.1 ஐ எனது ஆட்டோவில் ஏற்றிவிட்டு 2, 3 நபர்கள் வந்தார்கள். அ.சா.1 ஐ திண்டிவனம் அரசு மருத்துவமனையில் இறக்கிவிட்டேன். அன்றையதினம் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய நபர் இன்று ஆஜரிலிருக்கும் எதிரி ஆவார். அவரும் அவரின் இருச்சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு வந்தார். அ.சா1, அ.சா.2 ஆகியோர்களை இந்தவிபத்து சமயத்தில் தான் தெரிந்துகொண்டேன். வழக்கு சம்மந்தமாகபோலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு ஆட்டோ ஸ்டேண்டு மயிலம் பெட்ரோல் பங்க அருகே உள்ளது என்றால்

சரிதான். அங்கிருந்து தான் காலை 8 மணிக்கு சவாரி அழைத்துச்சென்றேன் என்றால் சரிதான். மயிலம் பேருந்து நிறுத்தத்திலிருந்து செஞ்சி பேருந்து நிறுத்தம் செல்ல சுமார் 3 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான், போக்குவரத்து நெரிசலை பொறுத்து சுமார் 20 நிமிடம் ஆகும். நான் செஞ்சி பேருந்து நிறுத்தம் சென்றபோது கூட்டமாக இருந்தார்கள், அவர்கள் அழைத்து தான் சென்றேன் என்றால் சரியல்ல, பேருந்து நிறுத்தம் அருகே நான் ஆட்டோவின் வெளியில் நின்றிருந்தேன், ஆட்டோவிற்கு பின்புறத்தில் விபத்து ஏற்பட்டது. என்னை யார் மருத்துவமனைக்கு அழைத்தது என்றால் அங்கிருந்தவர்கள் அழைத்தார்கள். நான் சம்பவயிடத்தில் இல்லை, அ.சா.2 எனது நண்பர் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக அவருக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரியை சம்பவயிடத்தில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.